தினமலர் திருச்சி செவ்வாய் ஆகஸ்ட் 25, 2020

Karur Vysya Bank
Smart way to bank

# THE KARUR VYSYA BANK LIMITED

Registered & Central Office, No. 20, Erode Road,
Vadivel Nagar, L.N.S., Karur – 639002
[CIN No: L65110TN1916PLC001295]
[e-mail:kvbshares@kvbmail.com] [Website: www.kvb.co.in]
[Tel No: 04324-269441] [Fax No: 04324-225700]

## காணொளி காட்சி வாயிலாக நடைபெறும் 101வது வருடாந்திர மகா சபை கூட்டம்

இந்திய அரசின் பெருநிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சகமும் (MCA), இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியமும் (SEBI) தங்களின் பல்வேறு சுற்றறிக்கைகளின் மூலம் (சுற்றறிக்கைகள் விவரம் : Ministry of Corporate Affairs (MCA) Circulars No 20/2020 dated 05.05.2020, 14/2020 dated and 08.04.2020 and 17/2020 dated 13.04.2020; SEBI Circular No SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 dated 12.05.2020) வருடாந்திர மகாசபை கூட்டத்தினை காணொளி காட்சி வாயிலாக நடத்துவதற்கான பல்வேறு வழிகாட்டுதல்களையும், இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள், 2015 (SEBI LODR 2015)- விருந்து சில நடைமுறை விலக்குகளையும் வழங்கியுள்ளது. அதன்படி, உலகமெங்கும் பரவி வரும் COVID-19 பெருந் தொற்று நோயின் காரணமாக வருடாந்திர மகாசபை கூட்டத்தை காணொளி காட்சி வாயிலாக நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.

மேற்கண்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிகழும் 2020 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 23ஆம் தேதி காலை 11 மணி அளவில் வங்கியின் 101வது வருடாந்திர மகாசபை கூட்டம் காணொளிக் காட்சி வாயிலாக நடைபெறும் என்பதை வங்கி உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வங்கியின் 101வது மகாசபை கூட்டத்திற்கான அறிவிப்பும், 2019-20 ஆம் நிதி ஆண்டிற்கான ஆண்டு அறிக்கையும், மின்னஞ்சல் முகவரியினை முதலீட்டு பங்கேற்பாளரிடமோ (Depository Participant), வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரிடமோ (Registrar & Transfer Agent) பதிவு செய்து உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்-அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும் எனவும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. மேலும் 101வது மகாசபை கூட்டத்திற்கான அறிவிப்பும், 2019-20 ஆம் நிதி ஆண்டிற்கான ஆண்டு அறிக்கையும் வங்கியின் இணையதளத்திலும் (https://www.kvb.co.in/investor-corner/annual-general-meeting/) தேசிய பங்குகள் வைப்பு நிறுவனம் (NSDL - https://www.evoting.nsdl.com) மற்றும் தேசிய பங்குச் சந்தை (NSE - https://www.nseindia.com) ஆகியவற்றின் இணையதளங்களிலும் பதிவேற்றம் செய்யப்படும்.

மகாசபைக் கூட்டத்தில் பங்கேற்று வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்கள் பட்டியல் 16.09.2020 தேதி அன்று இறுதி செய்யப்படும். மகாசபை கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட நாளுக்கும் இறுதி நாளின் (16.09.2020) அலுவல் நேர முடிவுக்கும் இடையில் வங்கியின் பங்குகளை வாங்கியதன் மூலமாக உறுப்பினரானவர்கள், தொலைதூர மற்றும் மின்னணு முறையில் வாக்களிப்பதற்கான பயனர் பெயரையும் (Log-in ID), கடவுச் சொல்லையும், (Password), kvb_sig@kvbmail.com அல்லது info@skdc-consultants.com அல்லது என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பித்து பெற்று கொள்ளலாம். இறுதி நாளன்று உறுப்பினராக அல்லாதவர்களுக்கு மகாசபை கூட்ட அறிவிப்பு என்பது ஒரு தகவலுக்காக மட்டுமே.

இதுவரை தங்களது மின் அஞ்சல் முகவரியினை பதிவு செய்து கொள்ளாத உறுப்பினர்கள் கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றி மின்னஞ்சல் முகவரியினை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

(i) பங்குப்பத்திரம் வைத்திருக்கும் உறுப்பினர்கள் (Physical Share certificate holders): வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரிடம் (i.e., M/s SKDC Consultants Ltd), தங்களது பெயர், பங்கு வரிசை எண் (Folio No), மின் அஞ்சல் முகவரி, அலைபேசி எண், வருமான வரித்துறை அடையாள எண் (PAN) ஆகியவற்றை குறிப்பிட்டு முறையாக கையொப்பமிடப்பட்ட விண்ணப்பத்தின் மின்னணு நகலுடன் சுயசான்று அளிக்கப்பட்ட வருமானவரி அடையாள அட்டையின் (PAN Card) மின்னணு நகலையும் இணைத்து green@skdc-consultants.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம்.

(ii) பங்குகளை மின்னணு முறையில் வைத்திருக்கும் உறுப்பினர்கள்: மின் அஞ்சல் முகவரியினை தாங்கள் மின்னணு கணக்கு வைத்துள்ள முதலீட்டு பங்கேற்பாளரிடம் (Depository Participant) பதிவு செய்து கொள்ளலாம்.

இறுதி நாளான 16.09.2020 அன்று வரை பதிவு செய்யப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மகாசபை கூட்டத்திற்கான அறிவிப்பும், 2019-20 ஆம் நிதி ஆண்டுக்கான ஆண்டு அறிக்கையும் மின் அஞ்சல் மூலம் உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

101வது மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீது வங்கியின் உறுப்பினர்கள் வாக்கு அளிப்பதற்கான வாய்ப்பினை மகா சபை கூட்ட நாளுக்கு முன்புவரை தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையின் மூலமும் மகா சபை கூட்ட நாளன்று மின்னணு வாக்களிப்பு முறையின் மூலமும் வங்கி ஏற்படுத்தித் தரும். மேலும் மின்னஞ்சல் முகவரியினை பதிவு செய்வது மின்னணு முறையில் ஓட்டளிப்பது காணொளிக் காட்சி வாயிலாக மகாசபை கூட்டத்தில் பங்கேற்பது போன்றவைகள் தொடர்பான மேலதிக தகவல்கள் மகா சபை கூட்ட அறிவிப்பிலும் மற்றும் வங்கியின் இணையதளத்திலும் வெளியிடப்படும். எனவே உறுப்பினர்கள் வங்கியின் https://www.kvb.co.in/investor-corner/annual-general-meeting/ என்ற இணையதள முகவரியை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வங்கிகள் 31.03.2020 இல் முடிவடையும் நிதி ஆண்டிற்கான பங்கு ஆதாயத்தை பங்குதாரர்களுக்கு வழங்குவதை மறு உத்தரவு வரும் வரை நிறுத்தி வைத்து இந்திய ரிசர்வ் வங்கி 17.04.2020 ஆம் தேதியிட்ட சுற்றறிக்கையின் வாயிலாக (சுற்றறிக்கை எண்: DOR.BP.BC.No.64/21.02.067/2019-20) உத்தரவு பிறப்பித்துள்ளது என்பதை வங்கியின் உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த அறிவிப்பானது வங்கி உறுப்பினர்களின் நன்மை கருதியும், இந்திய அரசின் பெருநிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சகமும், பங்கு பரிவர்த்தனை வாரியமும் வெளியிட்டுள்ள சுற்றறிக்கைகளில் உள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்கியும் வெளியிடப்படுகிறது.

தி கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

**ஸ்ரீனிவாச ராவ் M**
நிறுமச் செயலர்
(உறுப்பினர் எண் : ACS 19189)

இடம் : கரூர்
தேதி : 24.08.2020